

நாகை மாவட்டம் திருமருகல் ஊராட்சி ஒன்றியம் அம்பல் ஊராட்சியில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை சார்பில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி மற்றும் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதித் திட்டத்தின் கீழ் புதிதாக கட்டப்பட்டுள்ள அங்கன்வாடி மையக் கட்டடத்தினை பள்ளி கல்வித்துறை அமைச்சர். அன்பில் மகேஸ் பொய்யாமொழி திறந்து வைத்தார். உடன் நாகை மாவட்ட கழக செயலாளர் என். கௌதமன், நாகை மாவட்ட ஆட்சித்தலைவர் ப.ஆகாஷ், நாகை நாடாளுமன்ற உறுப்பினர் வை.செல்வராஜ், நாகை சட்டமன்ற உறுப்பினர் ஜெ.முகம்மது ஷா நவாஸ், திருமுருகன் வடக்கு ஒன்றிய கழக செயலாளர் செல்வ.செங்குட்டுவன் ஆகியோர் உள்ளனர்.




ஈரோடு மாவட்டம், சென்னிமலை தொடக்க கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்தில் நவீன விற்பனை நிலையத்தினை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கழக துணைப் பொதுச் செயலாளர் மு.பெ.சாமிநாதன், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி ஆகியோர் துவக்கி வைத்து பார்வையிட்டனர். இதில் கைத்தறித்துறை இயக்குநர் மகேஸ்வரி ரவிக்குமார், மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி, திருப்பூர் கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர், மாநகராட்சி 4ம் மண்டல குழுத்தலைவர் இல.பத்மநாபன், ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர், கழக இளைஞர் அணி துணை செயலாளர் கே.இ.பிரகாஷ், சென்னிமலை பேரூராட்சி தலைவர் ஸ்ரீதேவி, கைத்தறி இணை இயக்குநர் கணேசன், சீருடை இணை இயக்குநர் மாதேஸ்வரன், கைத்தறித்துறை கூடுதல் இயக்குநர் மகாலிங்கம், உதவி இயக்குநர் சரவணன் உள்பட ஒன்றிய, பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

பெண்களுக்கு புற்று நோய் பரிசோதனை : 38 மாவட்டங்களுக்கும் மருத்துவ வாகன சேவை!

# ரூ.36 கோடி செலவில் - கருப்பை வாய் புற்றுநோய் தடுப்பூசி!

## 14 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு விரைவில் செலுத்தப்படும்!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் அறிவிப்பு!



சென்னை, நவ.11-

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தலைமையில் நேற்று முன்தினம் (09.11.2025) சென்னை, அன்னை வேளாங்கன்னி கல்லூரியில் நடைபெற்ற நிகழ்ச்சியில், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை சார்பில் முதலமைச்ச ரின் பெண் குழந்தைகள் பாதுகாப்பு திட்டத்தின்கீழ், தென்சென்னை மாவட்டத்தில் தகுதி வாய்ந்த 125க்கும் மேற்பட்ட குடும்பங்களைச் சார்ந்த 259 பெண் குழந்தைகளுக்கு தலா ரூ.25,000/ அரசு சேமிப்பு பத்திரங்கள் மற்றும் சைதாப்பேட்டை சட்டமன்ற தொகுதியைச் சார்ந்த 118 இளம் பெண்களுக்கு அதிகபட்சமாக தலா ரூ.50,000/ வரையிலான காசோலைகளை வழங்கினார்.

பிறகு அமைச்சர் மா.சுப்பிரமணியம் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

**பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம்**

சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறையின் சார்பில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலோடு, முதலமைச்சரின் பெண் குழந்தைகள் பாதுகாப்பு திட்டம் இன்றைக்கு மிக சிறப்பான வகையில் பயன்பெற்று வருகிறது. முதலமைச்சர் முதலமைச்சரின் பெண் குழந்தைகள் பாதுகாப்பு திட்டத்தை பெண் சிசுக்கொலையை தடுப்பது, குழந்தை திருமணத்தை தடுப்பது மற்றும் பெண் குழந்தைகளின் கல்வியை மேம்படுத்துவதை நோக்கமாக கொண்டு இந்த திட்டம் தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த திட்டத்தின்படி பெண் கரு மற்றும் சிசு கொலைகளை தடுத்தல், குழந்தை திருமணங்களை தடுத்தல், நிதி பாதுகாப்பை மேம்படுத்துதல், பெண் கல்வியை மேம்படுத்துதல், ஆண் குழந்தைகளை மட்டுமே விரும்பும் மனப்போக்குகளை மாற்றுதல், சிறு குடும்ப முறையை ஊக்குவித்தல், குழந்தை பாலின விகிதத்தை உயர்த்துதல் போன்றவைகள் இந்த திட்டத்தின் நோக்கமாகும்.

தமிழ்நாடு முதலமைச்சர் இந்த திட்டத்தின் பலனை பொதுமக்களுக்கு மிகப் பெரிய அளவில் சென்றடைய வேண்டும் என்கின்ற வகையில் கடந்த 4 ஆண்டுகளாக இதற்கு முன்பு இந்த திட்ட த்தில் பயன்பெறுபவர்களுக்கு ஆண்டு வருமானம் ரூ.72,000/ என்று இருந்ததை மாற்றி தற்போது ரூ.1,20,000/ என்று உயர்த்தி இருக்கிறார்கள். அதேபோல் கருத்தடை செய்பவர்களின் வயது 40 என்று இருந்ததை 49 வயது என்று உயர்த்தி இருக்கிறார்கள். இதன் மூலம் இந்த திட்டத்தில் ஏராளமான பேர் பயன் பெறுகிறார்கள்.

**புற்றுநோய் தடுப்பூசி திட்டம்**

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, பெண் குழந்தைகளு க்கென்று பாதுகாப்பு திட்டங்கள் தொடர்ச்சியாக செய்ய ப்பட்டு வருகிறது. புதுமைப் பெண் திட்டம், விடியல் பயணம் திட்டம், கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டம், காலை உணவுத் திட்டம் என்று திட்டங்களை சொல்லிக் கொண்டே போகலாம். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் விரைவில் மக்கள் நல்வாழ்வுத்துறையின் சார்பில் (Womens wellness) என்கின்ற வகையில் வாகனச் சேவை விரைவில் தமிழ்நாட்டில் அறிமுகப்படுத்தப் படவிருக்கிறது. மகளிர்கள் 100% அனைவரும் புற்றுநோய் பாதிப்பிலிருந்து பாதுகாப்பதற்குரிய நடவடிக்கைகளாக கருப்பை வாய் புற்றுநோய், மார்பக புற்றுநோய் என்று ஏறத்தாழ 8 வகையான புற்றுநோய் பாதிப்புகளிலிருந்து பாதுகாப்பதற்கு முழுமையான பரிசோதனைகள் செய்யக்கூடிய ஒரு திட்டம், வாகனங்களை ஒவ்வொரு மாவட்டத்திற்கும் அனுப்பி முழு பரிசோதனை வசதிகளுடன் கூடிய அந்த வாகனம் விரைவில் அறிமுகப்படுத்தப்பட உள்ளது. இந்தியாவிலேயே தமிழ்நாட்டில் முதன்முறையாக அந்த திட்டம் இங்கு செயல்படுத்தப்படவிருக்கிறது. 38 மாவட்டங்களுக்கும் 38 வாகனங்கள் வடிவமைக்கும் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இன்னும் 10 நாட்களில் முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்படவிருக்கிறது. அதேபோல் முதலமைச்சர் பெண் குழந்தைகளைப் பாதுகாத்திடும் வகையில் 202526ஆம் நிதி ஆண்டில் ரூ.36 கோடி செலவில் 14 வயதிற்குட்பட்ட பெண் குழந்தை களுக்கு HPV (Human Papilloma Virus) வைரஸ் என்று சொல்லக்கூடிய கருப்பைவாய் புற்றுநோய் தடுப்பூசி பெண் குழந்தைகளுக்கு செலுத்த தொடங்கப்படவிருக்கிறது.

தனியார் மருத்துவமனைகளில் இந்த தடுப்பூசிகளுக்கு அதிகம் செலவு ஆகும். ஆனால் அரசு மருத்துவமனைகளில் இலவசமாக போடுவதற்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் இந்த திட்டம் விரைவில் தொடங்கப்படவிருக்கிறது. ஆக பெண்குழந்தைகளுக்கு பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வரும் நிலையில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை சார்பில் தென் சென்னை மாவட்டத்தில் மட்டும் 118 பெண் குழந்தைகளுக்கு அதாவது 18 வயது நிரம்பிய பெண் குழந்தைகளுக்கு ரூ.50,000/ வரை ஒவ்வொருவருக்கும் வழங்கப்பட்டுள்ளது.

அதோடுமட்டுமல்லாமல் 259 குழந்தைகளை பயனாளிகளாக தேர்வு செய்து அவர்களுக்கு சேமிப்பு பத்திரம் வழங்கப்பட்டுள்ளது. ஆக 259 பெண் குழந்தைகளுக்கு சேமிப்பு பத்திரமும், 118 பேருக்கு முதிர்வுத்தொகை வழங்கும் நிகழ்ச்சி மிகச் சிறப்பாக நடைபெற்றுள்ளது. அதோடுமட்டுமல்லாமல் குறைந்த வயதில் திருமணம் செய்துக் கொள்ளும் பெண் குழந்தைகளை பாதுகாப்பதற்குரிய உறுதிமொழியும் அதற்கு எதிராக கையெழுத்து பிரச்சாரமும் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அமைச்சர் மா.சுப்பிரமணியன் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் வேளச்சேரி சட்டமன்ற உறுப்பினர் அசன் மௌலானா, மண்டலக்குழுத் தலைவர் துரைராஜ், கிருஷ்ணமூர்த்தி, மாமன்ற உறுப்பினர் மோகன்குமார் மற்றும் மாவட்ட சமூக நல அலுவலர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் பலர் கலந்து கொண்டனர்.

நவ.27. துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாள்:

# ஆதி திராவிடர் நலக்குழு சார்பில் நல உதவிகள் வழங்கி சிறப்பாக கொண்டாடுவோம்!

## ஆதி திராவிடர் நலக்குழுக் கூட்டத்தில் தீர்மானம்! ஆ.கிருஷ்ணசாமி எம்,எல்,ஏ, அறிவிப்பு!





சென்னை, நவ.11-

தி.மு.க. ஆதிதிராவிடர் நலக்குழு மாநில நிர்வாகிகள் கூட்டம் நேற்று முன்தினம் (09-11-2025) காலை 10.30 மணி அளவில் சென்னை, அண்ணா அறிவாலயத்திலுள்ள கழக அலுவலகத்தில் தி.மு.க. ஆதிதிராவிடர் நலக்குழுத் தலைவர் மருதூர்ஏ.இராமலிங்கம் அவர்கள் தலைமையில், துணைத்தலைவர் மாண்புமிகு அமைச்சர் மா.மதிவேந்தன், இணைச் செயலாளர்கள் புஷ்பராஜ், முன்னாள் எம்.எல்.ஏ., வி.பி. இராஜன், திப்பம்பட்டி ஆறுச்சாமி, துணைச் செயலாளர்கள் பா. துரைசாமி, மு.பொன்தோஸ், மு. பரமானந்தம், சி. தசரதன், சா. இராசேந்திரன், மாரியப்பன் கென்னடி, முன்னாள் எம்.எல்.ஏ., கொ.ரமேஷ் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் தி.மு.க. ஆதிதிராவிடர் நலக்குழுச் செயலாளர் ஆ. கிருஷ்ணசாமி, எம்.எல்.ஏ., அவர்கள் ஆதிதிராவிடர் நலக் குழுவின் ஆக்கப் பணிகள் குறித்து உரையாற்றினார்.

சென்னை வடக்கு, சென்னை வடகிழக்கு, சென்னை கிழக்கு, சென்னை மேற்கு, சென்னை தென் மேற்கு, சென்னை தெற்கு, திருவள்ளூர் கிழக்கு, திருவள்ளூர் மத்திய, திருவள்ளூர் மேற்கு, காஞ்சிபுரம் வடக்கு, காஞ்சிபுரம் தெற்கு, இராணிப்பேட்டை, வேலூர் ஆகிய மாவட்டங்களின் ஆதிதிராவிடர் நலக்குழு மாவட்ட அமைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் நிறை வேற்றப்பட்ட இரங்கல் தீர்மானம் வருமாறு:-

1. 23.10.2025 அன்று உடல்நலக் குறைவால் நம்மை விட்டு மறைந்த சேந்தமங்கலம் சட்டமன்ற உறுப்பினர் கே. பொன்னுசாமி அவர்களுக்கு தி.மு.க ஆதிதிராவிடர் நலக்குழு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறது.

கரூரில் நெரிசலில் சிக்கி உயிரிழந்த 41 நபர்களின் குடும்பங்களுக்கு தி.மு.க ஆதிதிராவிடர் நலக்குழு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறது.

இவ்வாறு இரங்கல் தீர்மானம் நிறைவேற்றப் பட்டது.

இக்கூட்டத்தில் நிறை வேற்றப்பட்ட தீர்மா னங்கள் வருமாறு:-

2025 செப்டம்பர் 17 ஆம் நாள் கரூரில் நடைபெற்ற கழக முப்பெரும் விழாவில் ஆதிதிராவிடர் நலக்குழு தலைவர் திரு. மருதூர் இராமலிங்கம் அவர்களுக்கு பேராசிரியர் விருது வழங்கிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கழக தலைவர் அவர்களுக்கு நன்றியை தெரி வித்துக் கொள்கிறோம்.

நவம்பர் 27-ல், பிறந்தநாள் காணும் நமது கழக இளைஞர் அணி செயலாளரும் தமிழ்நாடு துணை முதலமைச்சருமான திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு ஆதிதிராவிடர் நலக்குழு சார்பில் மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பேரூர், பகுதி மற்றும் வார்டுகளில் கழக இருவண்ண கொடியேற்றி, இனிப்புகள் வழங்கி கொண்டாட வேண்டும், மேலும் ஆதிதிராவிடர் மக்கள் வசிக்கும் பகுதிகளில் பொதுக்கூட்டங்கள் நடத்தி, ஏழையெளி மக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்க வேண்டும்.

**கரூரில் நெரிசலில் சிக்கி பலியானவர்களுக்கு இரங்கல்!**

கரூரில் நெரிசலில் சிக்கி உயிரிழந்த 41 நபர்களின் குடும்பங்களுக்கு தி.மு.க ஆதிதிராவிடர் நலக்குழு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறது. கரூரில் ஒரு நடிகரின் கட்சி நடத்தி பொதுக்கூட்டத்தில் ஏற்பட்ட நெரிசலில் 41 பேர் சிக்கி உயிரிழந்த செய்தி அறிந்த சில மணி நேரங்களில் போர்க்கால நடவடிக்கை எடுத்ததுடன், உயிரிழந்தவர்களின் குடும்பத்திற்கு தலா பத்து லட்ச ரூபாய் நிவாரணநிதி அளிக்கப்படும் என்று அறிவித்ததோடு நில்லாமல், நள்ளிரவே கரூருக்குச் சென்று, ஆய்வு செய்ததுடன், உயிரிழந்த 40 பேரின் உடலுக்கு இறுதி அஞ்சலி செலுத்தி அவர்கள் குடும்பத்திற்கு ஆறுதல் சொல்லிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களுக்கு இக் கூட்டம் தனது பாராட்டுகளை தெரிவித்துக் கொள்கிறது.

**கண்ணகி நகர் வீராங்கணைக்கு பாராட்டு!**

சென்னை, கண்ணகி நகர் குடியிருப்புப் பகுதியின் பிம்பத்தையே மாற்றியமைக்கும் ஒரு மகத்தான சாதனையை நிகழ்த்திக் காட்டியிருக்கிறார் 18 வயது கபடி வீராங்கனை கார்த்திகா. அண்மையில் பஹ்ரைனில் நடைபெற்ற 18 வயதுக்குட்பட்டோருக்கான ஆசிய இளைஞர் விளை யாட்டுப் போட்டிகளில் இந்திய மகளிர் கபடி அணியின் துணைத் தலைவராக தங்கம் வென்று, நமது முதலமைச்சர் அவர்களின் பொற்கரங்களால் 25 லட்சம் ரூபாய் பெற்று தமிழகத்திற்கும் இந்தியாவிற்கும் பெருமை சேர்த்தமைக்கு வாழ்த்துக்களை தி.மு.க ஆதிதிராவிடர் நலக்குழு தெரிவித்துக் கொள்கிறது. மேலும் பஹ்ரைனில் நடைபெற்ற 18 வயதுக்குட்பட்டோருக்கான ஆடவர் இந்திய கபடி போட்டியில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் பிறந்த திருவாரூர் மாவட்டத்தை சார்ந்த அபினேஷ் என்ற வீரர் தங்கம் வென்று, நமது முதலமைச்சர் அவர்களின் பொற்கரங்களால் 25 லட்சம் ரூபாய் பெற்று தமிழகத்திற்கும் இந்தியாவிற்கும் பெருமை சேர்த்தமைக்கு வாழ்த்துக்களை தி.மு.க ஆதிதிராவிடர் நலக்குழு தெரிவித்துக் கொள்கிறது.

**சாதி பெயர்களை நீக்கியதற்கு நன்றி!**

தமிழ்நாட்டில் தெருக்களில் உள்ள சாதி பெயர்களை நீக்கிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியை தி.மு.க ஆதிதிராவிடர் நலக்குழு தெரிவித்துக் கொள்கிறது.

(SIR) வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர சீராய்வு என்ற பெயரில் ஆதிதிராவிடர்கள் மற்றும் சிறுபான்மை யினர் வாக்குகளை திருட நினைக்கும் ஒன்றிய பா.ஜ.க அரசுக்கு தி.மு.க ஆதிதிராவிடர் நலக்குழு கண்டனத்தை தெரிவித்துக் கொள்கிறது

தி.மு.க. ஆதிதிராவிடர் நலக்குழு மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் நிர்வாகிகள் மாண்புமிகு தமிழ்நாடு முதமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் உத்தரவின்படி, தத்தமது பகுதிகளில் உள்ள கழக


BLA-2களுடன் இணைந்து வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணி(SIR)களில் ஈடுபட்டு ஒவ்வொரு வாக்காளரையும் சேர்த்திடும் பணிகளில் தங்களை முழுமையாக ஈடுபடுத்திட வேண்டுமென இக் கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### எழும்பூர் கு. வீராசாமி

### நவம்பர் 11 (2015)



மொழிப் போர் தியாகியான இவர், எழும்பூர் பகுதியில் கழகம் வளர்த்தவர்களில் ஒருவராகவும் – தலைமைக் கழகப் பேச்சாளராகவும் விளங்கியவர்.

எழும்பூர் பகுதிக் கழகப் பொறுப்பாளராக பொறுப்பு வகித்து கழகப் பணியாற்றியவர்.

கழகத்தின் தொழிற் சங்கப் பணிகளில் ஈடுபாடு கொண்டு பணியாற்றியவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.


**தலைமைக் கழகம்**

**தி.மு.க.**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மணப்பாறை கா.அன்பழகன்

### நவம்பர் 11 (2018)



கழகம் துவக்கப்பட்ட போதே, தனது இளமைப் பருவத்திலேயே கழகத்தில் இணைந்து பணியாற்றியவர்.

முதன்முதலாக மணப்பாறையில் கிளைக் கழகத்தை துவக்கி, அக்கிளைச் செயலாளராகவும், மாவட்ட பிரதிநிதியாகவும் பொறுப்பு வகித்தவர்.

1964ல் குளித்தலையில் நடைபெற்ற சட்ட நகல் எரிப்பு போராட்டத்தில் அன்பிலார், பரமத்தி சண்முகம், குளித்தலை முத்துகிருஷ்ணன் போன்ற கழக முன்னோடிகளுடன் கலந்து கொண்டு கைது செய்யப்பட்டு, மூன்று மாத கடுங்காவல் தண்டனை பெற்று சிறைவாசம் அனுபவித்தவர். அதுமட்டுமல்லாமல் கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களிலும் கலந்து கொண்டவர்.

**தலைமைக் கழகம்**

**தி.மு.க.**